DEPOSITION OF WITNESS
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE No.I, BHAVANI
PROSECUTION WITNESS

CC. No. 76/2023 Crime No. 57/2023 Station Bhavani

| | | | |
|---|---|---|---|
| Name | PW-3/LW3- தங்கராஜு | Village | |
| Father Name | அர்த்தனாரி | Taluk | |
| Age | 36 | Calling | |
| Solemnly affirmed in accordance with the provisions of Act X of Oath Act the day of | | | 12.08.2024 |

**எதிரி ஆஜர்.**

**முதல் விசாரணை**

நான் திருநகர் காலனியில் குடியிருந்து கொண்டு, மார்க்கிங் துறையில் வேலை செய்து வருகிறேன். நான் விபத்தை நேரில் பார்க்கவில்லை. கடந்த 23.02.2023 ம் தேதியன்று, சுமார் காலை 05.30-05.45 மணியளவில், நான் பால் பண்ணையில் தண்ணீர் பிடித்துக் கொண்டிருந்தபோது சத்தம் கேட்டது. அருகில் சென்று பார்த்தபோது TVS XL மற்றும் பைக் மோதி விபத்து ஏற்பட்டிருந்தது.

**அரசு தரப்பில் இந்த சாட்சியை பிறழ் சாட்சியாக கருதக் கோரி கூறியதன் பேரில் இந்த சாட்சியை பிறழ் சாட்சியாக கருதப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை.**

நீங்கள் சம்பவத்தை நேரில் பார்த்த சங்கதிகளை போலீசார் விசாரணையிலும், கு.வி.மு.ச. 161 வாக்குமூலத்திலும் கூறிவிட்டு தற்பொழுது ஆஜர் எதிரியின் வேண்டுகோளுக்கிணங்க அனைத்து சங்கதிகளையும் மறைத்து தற்பொழுது எதிரிக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல.